பார்ப்பனரல்லாத இயக்கமும், பவள விழா காணும் கழகமும்!

காஞ்சித் தலைவன் பேரறிஞர் அண்ணா அவர்களால் 1949 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட திராவிட முன்னேற்றக் கழகம் என்ற பேரியக்கம் அண்ணாவின் தம்பிகளால் வளர்க்கப்பட்டு அவரது தம்பிகளில் தலையாயத் தம்பியான முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் 50 ஆண்டுகளுக்கு மேல் கட்டிக் காக்கப்பட்டு வந்த பின்னரும், தலைவர் முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்களின் தலைமையில் வெற்றிகரமாக இயங்கிக் கொண்டிருக்கிற தி.மு. கழகம் பவள விழா ஆண்டை நிறைவு செய்கிறது.

அரசியல் பேரியக்கமான தி.மு.க 75 ஆண்டுகாலமாக மக்களுக்குப் பணியாற்றி 2024 ஆம் ஆண்டு தனது பவள விழா நிறைவினைக் கொண்டாடும் இந்நன்னாளினை யொட்டிக் கழகக் கொடிக் கம்பங்கள் அனைத்தும் புதுப்பிக்கப்பட்டு, அதில் அந்தந்தப் பகுதியில் கழகத்திற்காக அல்லும், பகலும் உழைத்த மூத்த முன்னோடிகளின் கரங்களால் நம் இரு வண்ணக் கொடியை ஏற்றிப் பட்டொளி வீசிப் பறந்திடச் செய்திட வேண்டும் என்று மாவட்டச்செயலாளர்கள் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டதை நினைவுப்படுத்திக் கழகத் தலைவர் தளபதி அவர்கள் வெளியிட்ட தனது அறிவிப்பில் கழகத் தோழர்களுக்கு அன்பு கலந்த வேண்டுகோள் விடுத்துள்ளார்.

“....திமுக வரலாறு ஒரு நாட்டுக்கு ஏற்பட்ட அடிமைத் தனத்தை அகற்ற எடுத்துக் கொள்ளப்பட்ட அரிய முயற்சிகளை உள்ளடக்கியது மட்டுமல்ல; இரு இன மக்கள் நமது இனம் பற்றிய உணர்வு பெற்றதிலிருந்து தொடங்கிப், படிப்படியாக வேறு பல துறைகளைக் கண்டும், கொண்டும் வளர்ந்து கொண்டு வருகிறது. முற்றுப் பெறவில்லை; இன்று உள்ள கட்டம் வழி தெரிகிறது என்று கூறத்தக்கது.

“ .....இதற்கு இடையில் அரிமா நோக்கு போல் திராவிடச் சமுதாயத்திலே அவ்வப் பொது காணப்பட்ட கட்டங்களைத் தொகுத்தும், விளக்கியும், முறைப்படுத்தியும் பார்க்க வேண்டும். அது நாட்டுக்குத் தேவையான பயிற்சி! நல்ல முயற்சி! அத்தகைய உணர்வு வரலாற்றைப் படிக்கப்பெற உதவும் இயலும் என்பது உண்மை! எப்போதும் ஒரு பெரிய இயக்கம் ஈர்த்துக் கொண்டதால் அதன் வயப்பட்டு விட்டதாகவும் எண்ணுகிறேன்! .நம்மையும் அறியாமல் நாம் ஒரு புது வரலாற்று சிறப்புக் கொண்டு வருகிறோம். என்ற உணர்வு எனக்குச் சிற் சில வேளைகளில் ஏற்படும் உண்டு! எப்போதும் ஒரு பெரிய இயக்கம் ஈர்த்துக் கொண்டதால் அதன் வயப்பட்டு விட்டதாகவும் நான் எண்ணுகிறேன்.

“.....கழகத்தவர் இன்னல்களுக்கு இடையிலே எப்போதும் இருந்திருந்து பழகிப்போனவர் தழும்பேறி ஏறிப் போன நிலை. இடுக்கண் வளர்ந்து நெருங்கும்போது எவருக்கும் தான் இருக்கும் இடம் செய்யும் பணி ஈடுபட்டுள்ள இயக்கம் தொடர்பு கொண்டுள்ள தோழர்கள் எனும் இவை பற்றியெல்லாம் ஐயப்பாடு, கோபம், அருவருப்பு , அச்சம், சலிப்பு இவை மூளும்!

“ ....தியாகராயர் நாள் தொட்டுத் திராவிடர் மேற்கொண்ட சீரிய செயல்களையும் ஒருங்கே கண்டால் தான், இன்று நாம் மேற்கொண்டுள்ள பல கருத்துகளுக்கு முழுப் பொருள் தெரியும்! நுனிப் புல் மேய்வதில் பயனில்லை. இன்றைய நினைப்புகளுக்கு. வரலாறு இருக்கிறது. நம்முடைய இன்றைய முறைகள், ஏற்பாடுகள் இவைகளுக்கெல்லாம் வரலாறு இருக்கிறது.. ஒரு நாட்டிலே உள்ள தட்பவெட்ப நிலைக்கு ஏற்ப வாழ்க்கை முறை அமைவது போல், ஓர் இயக்கத்தில் ஏற்பட்ட பல்வேறு நிகழ்ச்சிகள் உருவாக்கி வைக்கும் வாழ்க்கை முறை ஒன்றுண்டு அதனுடைய தொடக்கம் ,வளர்ச்சி, இன்றைய கட்டம் இவ்வளவும் இருக்கிறது என்பதை தி.மு.க. வரலாறு இன்றைய தேவையை ஈடேற்றி வைக்கும் நல்ல முயற்சி கொண்டிருக்கிறது!... ”

என்று கழகம் பற்றிய மேற்கண்ட வைர வரிகளைத் தந்த பேரறிஞர் அண்ணா அவர்கள், தி.மு.க. வரலாறு எழுதிய டி.எம். பார்த்தசாரதி அவர்கள் எழுதிய நூலுக்கு அணிந்துரையாக வழங்கியிருக்கிறார்.

உப்புக்கும், முத்துக்கும் இடம் அளிக்கும் கடலானது, உயிர் பறிக்கும் திமிங்கல்களுக்கும், இடம் அளிப்பது போல; வல்லவர்க்கும், நல்லவர்க்கும் இடம் தரும் வரலாறு; வஞ்சகருக்கும், கோழைகளுக்கும் இடமளிக்கத்தான் செய்கிறது ...அதுவும் விடுதலை வரலாற்றில் அத்தகையோர் குறுக்கீடுகள் ஏராளம். ஏராளம்! இந்தத் திராவிட இயக்க வரலாற்றில் தீய சக்திகளால் சுதந்திரப் போர் வீரர்களுக்கு விளைத்த இடையூறுகள், அவைகளைக் கிள்ளி எறிந்து இயக்கம் பெற்ற வெற்றிகள் ஏராளம் உண்டு! திராவிடத்தின் கருவூலங்களில் ஒவ்வொருவரும் பேணிப் பாதுகாக்க வேண்டியது திமுக வரலாறு.” என்று 50 ஆண்டுகள் தி.மு.க. கட்சித் தலைவராக இருந்து, கட்டிக்காத்து வந்த முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள், கழகத்தின் வரலாறு பற்றி எழுதியும், பேசி வந்துள்ளார்.

இந்தியாவிலேயே முதன்முதலாக மாநில அடிப்படையில் ஒரு கட்சி தோன்றி, மாபெரும் அளவில் வளர்ந்து ஆட்சியைப் பிடித்தது என்பது தமிழகத்தில் தான்! அந்தக் கட்சிதான் அண்ணா அவர்களால் உருவாக்கப்பட்ட இயக்கமான திராவிட முன்னேற்றக் கழகம்.

சி.என். அண்ணாதுரை எனும் அவர்; கழகத் தோழர்களாலும்.பொது மக்களாலும், ஏன் மற்ற கட்சியினராலும் “அண்ணா” என்று அன்புடன் அழைக்கப்பட்டவர். மயக்கந் தரும் அழகு நடை மேடைப் பேச்சாலும், நெஞ்சை அள்ளும் கருத்தோவியங் கவர்ந்த எழுத்தாலும் செல்வாக்கு மிகுந்த ஒரு புதுமையான திருப்பத்தை உண்டாக்கியவர்.

திராவிட முன்னேற்றக் கழகத் தொடக்க விழா சென்னை இராபிட்சன் பூங்கா மைதானத்தில், 17091949 அன்று மாலை மிகச் சிறப்பாக நடந்தது காலையில் தலைவர்கள் கூடி முடிவு செய்தவற்றைப் பொதுமக்களுக்கு அறிவிப்பதற்காக இக்கூட்டம் நடத்தப்பட்டது. அண்ணா அவர்கள் கழகத்தின் கொள்கைகளைப் பற்றிப் பேசிய போது, “திராவிடர்க் கழகத்தின் அடிப்படைக் கொள்கைகளின் மீதுதான், திராவிட முன்னேற்றக் கழகம் அமைக்கப்பட் டுள்ளது. அடிப்படைக் கொள்கைகளில், கருத்துகளில் மாறுதல், மோதுதல் ஏதும் கிடையாது; சமுதாயத்துறையிலே சீர்திருத்தம்; பொருளாதாரத் துறையில் சமதர்மக் குறிக்கோள்; அரசியலில் வடநாட்டு ஏகாதிபத்தியத்திலிருந்து விடுதலை ஆகிய கொள்கையில் தான் திராவிட முன்னேற்றக் கழகத்தின் கோட்பாடுகள் ஆகும் “ என்று விளக்கினார்.

அண்ணாவுக்கு உறுதுணையாக நின்று திமுகவை வளர்த்தவர்களில் முத்தமிழறிஞர் கலைஞர், நாவலர் நெடுஞ்செழியன், பேராசிரியர் அன்பழகன், ஈ.வே.கி. சம்பத், கே.ஏ. மதியழகன், என்.வி.நடராசன் போன்றவர்கள் இரவு பகலாகத் தொண்டு புரிந்து, தோளோடு தோள் கொடுத்து நின்றதை இன்றும் வரலாறு பேசிக் கொண்டிருக்கிறது. “திமுகவின் வரலாற்றை எழுதும்போது பெரியார் என்ற மாமனிதரின் வாழ்க்கையில் இருந்தே அதைத் தொடங்க வேண்டும்” என்று வரலாறு எழுதுபவர்கள் கோடிட்டுக் காட்டுவார்கள்.

தி.மு.க தோன்றுவதற்குக் காரணமே தந்தை பெரியார் தாம்! ஈ.வெ. இராமசாமி என்றால் அது தவிர்க்க முடியாத பெயர். ஈ.வெ. இராமசாமி நாயக்கரான அவரை, “தந்தை பெரியார்” என்று இனி அழைக்கப்பட வேண்டும் என்று கருதிய நாகர்கோவில் வழக்குரைஞர் பி. சிதம்பரம் பிள்ளை முதன் முதலாக ஈ.வெ.ரா. பெரியார் என்று அழைத்தார் (1927). அதிலிருந்து ஈ.வெ.ரா.பெரியார் என்று பிரபலமாயிற்று. சென்னை இராஜஸ்தானியின் முதலமைச்சரான இராஜாஜி பள்ளிகளில் அறிமுகப்படுத்திய இந்தித் திணிப்பை எதிர்த்துப் போராடிச் சிறை சென்றார் பெரியார். 1938 இல் பெரியார் பெல்லாரி சிறையில் இருந்த போதுதான், நீதிக் கட்சித் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். தமிழ்நாட்டின் வரலாற்றில் நடைபெற்ற முதலாவது மாதர் மாநாடான தமிழ்நாட்டுப் பெண்கள் மாநாடு கூடியது. ஞானாம்பாள் சிவராஜ், பண்டிதை நாராயணி அம்மையார், வ.பா. தாமரைக் கண்ணி அம்மையார், மறைமலை அடிகளாரின் திருமகள் நீலாம்பிகை அம்மையார் ஆகியோர் கூட்டிய அம் மாநாட்டில், ஈ.வெ.ரா.வை எப்போதும் பெரியார் என்றே குறிப்பிட வேண்டும் என்று அறிவித்தது (1311.1938).

அது முதல் மிகவும் மரியாதையுடன் திராவிடர் கழகத்தைச் சேர்ந்தவர்கள் பெரியார் என்றே அழைத்து வந்தார்கள். அப்பெயர் திராவிடர் கழகம் மட்டுமல்லாது, மக்களிடையே மிகப் பிரபலமாகப் பேசப்படும் நெஞ்சை விட்டு அகற்றப்படாத சொல்லாயிற்று. அப்பழுக்கற்ற தலைவராக இருந்த அவர்; சாமானிய மக்களை ஈர்க்கின்ற வகையில் பேச்சில் வல்லவர்! எதையும் ஆணித்தரமாகவும், ஆதாரமாகவும் பேசுவார். எத்தகைய மனிதர்களையும் தன் பக்கம் சுண்டி இழுத்துப் போடக் கூடிய மிகுந்த அறிவாற்றல் பெற்றவர். அவர் பேச்சைக் கேட்கும் போது நேருக்கு நேர் உரையாடித் தம்முடன் பேசுவது போன்ற ஓர் உணர்ச்சி வெள்ளம் பாயும். மிகச்சிறந்த சொற்பொழிவாளர் அமைதி, தெளிவுப்படப், புரியும்படிப் பேசுவார். அவர் பேச்சிற்கு மயங்காதவர்கள் எவரும் இல்லை என்றளவில் தமிழுலகம் போற்றி வந்தது.

1912 இல் ஐக்கிய சங்கத்தை ஏற்படுத்தியவர்கள் தங்களுக்கென்று ஒரு தலைவர் தேவை என்று தேடினர். அந்த நாளகளில் தான் சமூக நீதிக்காகப் போராடி வந்த சென்னை நகர் திருவல்லிக்கேணியில் பிரபல மருத்துவராக விளங்கிய டாக்டர் நடேச முதலியார் கிடைக்கப் பெற்றார். அவரைச் சந்தித்தபோது, அவரும் மகிழ்ச்சியோடு செயலாளர் பொறுப்பை ஏற்றுக் கொண்டார். நடேசனார் செயலாளராகப் பொறுப்பேற்று நடத்தி வந்த சென்னை ஐக்கிய சங்கத்தின் உறுப்பினர்கள் நாளுக்கு நாள் அதிகரித்து வந்தது. சங்கத்தின் முதலாவது ஆண்டு விழா 1913 ஆம் ஆண்டு நடேசனாரின் மருத்துவமனை தோட்டத்தில் நடைபெற்ற போது, சங்கத்தின் பெயரானது நோக்கத்தைப் பிரதிபலிப்பதாக இல்லை என்றும், அதன் பெயர் மாற்றம் செய்யப்பட வேண்டும் என்றும் எண்ணினர்.

“பார்ப்பனன்” என்ற ஒரு சாதியைக் குறிப்பிட்டு அச்சாதி அல்லாதவர்கள் என்று நாம் ஏன் சொல்ல வேண்டும்? நமக்கென்று ஒரு இனம் இல்லையா? அதற்கென்று பேர் இல்லையா? என்று பேசிய டாக்டர் நடேசனார் திராவிட சங்கம் என்று பெயர் மாற்றலாம் ஏனென்றால், தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம் ஆகிய மொழி மக்கள் வாழுகிற ஒரே குடும்பமான நாம் அனைவரும் திராவிடர்கள் ஆயிற்றே!” என்ற முடிவை அறிவித்தார்.

1850 இல் “திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம்” என்று அரிய நூலை எழுதிய இராபர்ட் கால்டுவேல் என்ற மொழிநூல் ஆய்வறிஞர் தாம், திராவிட மொழிகள் பேசும் மக்கள் யாவரும் ஒரே இனத்தவர் எனக் குறிப்பிட்டது மட்டுமல்லாமல், தென்னிந்திய மொழிகளைப் பேசும் அனைவரும் “திராவிடர்” என்ற பெயரை அவர்தாம் முதன் முதலில் பயன் படுத்தினார்.

திராவிடன் என்ற இனப் பெயர் நடேசன் அதற்கு முன்பு தாழ்த்தப்பட்ட வகுப்பு சேர்ந்த படித்தறிந்த சிலர் 1892 இல் “திராவிட ஜன சங்கம்” என்ற ஓர் அமைப்பை ஏற்படுத்தி யிருக்கிறார்கள். ஆனால் அது காலப்போக்கில் வேகமாக அழிந்துவிட்டது. அதனால்தான் நடேசனார் “திராவிடச் சங்கம்” என்ற பெயரைச் சூட்டி இருளில் இருந்த “திராவிடன்” என்ற இனப் பேரை வெளிச்சத்துக்கு கொண்டு வந்த பெருமை அவரைச் சாரும். அத்துடன் வெளியூரில் இருந்து சென்னையில் தங்கிப் படிப்பதற்கு வரும் மாணவர்களுக்குத் தங்கும் விடுதி இல்லை என்பதால், “திராவிடச் சங்க இல்லம்” (Dravidian Association Hostel) என்ற விடுதியை இலவசமாகவே, 1918 ஆம் ஆண்டு திருவல்லிக்கேணி அக்பர் சாகிப் தெருவில் பெரியதொரு கட்டிடத்தில் ஏற்படுத்திச் தந்தார்.

எங்குப் பார்த்தாலும் கல்வி, வேலை வாய்ப்பில் திராவிடர்களுக்கு எதிராக ஆரியர் ஆதிக்கம், பார்ப்பன மயம் என்று பரவிக் கிடந்த காலம். வேத கல்வி முறை, சமஸ்கிருதம், இந்தித் திணிப்பு; பிராமணன், சத்ரியன், வைசியன், சூத்திரன் என வர்ணாசிரம முறை இவைகளால் திராவிட இன மக்கள் தீண்டாமைக் கொடுமையில் காலங் காலமாக அழுத்தப்பட்டு, ஒடுக்கப்பட்ட முறையை அனுபவித்து வந்தனர்.

1892 1904 ஆம் ஆண்டுக்கும் இடையில் மாகாண சிவில் சர்வீஸில் 16 பேரில் 15 பேர் பார்ப்பனர்கள். இது நூற்றுக்கு 95% ஆகும். உதவிப் பொறியாளர்கள் 21 பேரில் 17 பேர் பார்ப்பனர்கள், உதவி மாவட்ட ஆட்சித் தலைவர்கள் 140 பேரில் 77 பேர் பார்ப்பனர்கள் எனப் போட்டி தேர்வுகளில் தேர்ந்தெடுக்கப்பட்டனர். மீதியள்ளவர்களில் 30 பேர் பார்ப்பனரல்லாதவரும், 33 பேர் கிறிஸ்துவ முஸ்லிம் ஆங்கிலேய இந்தியப் பிரிவுகளைச் சேர்ந்தவர்கள். 1913 ஆம் ஆண்டு மாவட்ட நடுவர் தேர்வில் 128 பேரில் 93 பேர் பார்ப்பனர்கள். 25 பேர் பார்ப்பனரல்லாதவர்கள் .இந்திய உயர் நீதிமன்றத்தில் நியமிக்கப் பட்ட ஐந்து நீதிபதிகளில் 4 பேர் பார்ப்பனர். ஒருவர் பிற சமுதாயத்தைச் சேர்ந்தவர். 1914 இல் நியமிக்கப்பட்ட அரசு துறைச் செயலாளர், வருவாய்த்துறை உறுப்பினர், இரு மாவட்ட ஆட்சித் தலைவர் அனைவருமே பார்ப்பனர்களே என்று ஒரே பார்ப்பன மயமாக வேலை வாய்ப்புகளில் அலுவலகங்கள் செயல்பட்டு வந்தன.

இந்நிலையில் தான் வெள்ளுடை வேந்தர் சர். பிட்டி. தியாகராயர் செட்டியார், நாவுக்கரசர் டாக்டர் நாயர் டாக்டர் நடேச முதலியார் ஆகியோரும், அவர்களுடைய ஆதரவாளர்க ளுடன் 1916 ஆம் ஆண்டு நவம்பர் 20ஆம் நாள் சென்னை விக்டோரியா பொது மண்ட பத்தில் (Victoria Public Hall) வரலாற்று முக்கியத்துவம் உடைய இரண்டு முடிவுகள் எடுத்தனர். (1) தென்னிந்திய மக்கள் சங்கம் (South Indian people.s Association) என்ற பெயரில் ஓர் அமைப்பை தொடங்குவது, அதேபோன்று (2) தென்னிந்திய நல உரிமைச் சங்கம் (South Indian Liberal Federation) என்ற அமைப்பையும் உருவாக்குவது. அதன்படியே நீதிக்கட்சி என்னும் தென்னிந்திய நல உரிமைச் சங்கம் பிறந்தது. பிராமணர் அல்லாதார் உரிமைக்காகவும், நலனுக்காகவும் குரல் கொடுப்பதும், அதற்காகஅரசாங்க அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டு இவை பற்றிப் பேசுவதும், பிராமணர் அல்லாதவர்களுக்கான திட்டங்களைத் தீட்டிச் செயல்படுத்துவதுமான கொள்கைக்காகத் தான் உருவாக்கப்பட்ட தென்னிந்திய நல உரிமைச் சங்கம் எனும் அரசியல் கட்சியாகும். இக்கட்சி நீதி (Justice), திராவிடன் (Dravidan), ஆந்திர பிரகாசா (Andhra Prakasa) ஆகிய நாளேடுகளை முறையே ஆங்கிலத்திலும், தமிழிலும், தெலுங்கிலும் வெளியிடுவது என்று முடிவு செய்து பத்திரிகைகளும் தொடங்கப்பட்டன.

ஆங்கிலத்தில் நீதி எனும் நாளேடு செல்வாக்குப் பெற்றமையால், தென்னிந்திய நல உரிமைச் சங்கம், நீதிக்கட்சி (Justice Party) என்று பெயர் மாற்றம் பெற்றது. தனித்தனியே செயல்பட்டு வந்த சென்னைத் திராவிடர் சங்கமும், தென்னிந்திய மக்கள் சங்கமும், நீதிக்கட்சியுடன் இணைந்தன .இன உணர்ச்சி பெருக்கெடுத்து எழுச்சி பெற்ற இந்நன்னாளில் புழுவாகக் கிடந்த திராவிடர்கள், புலிகளாகச் சீறி எழுந்து புது வாழ்வு பெற்ற இந்த நீதி கட்சியின் தோற்றம் ஆகும். இது 1925 இல் சுயமரியாதை இயக்கமாகவும், 1937 இல் இந்தி எதிர்ப்புப் போர் இயக்கமாகவும், தமிழ் மறு மலர்ச்சிக்கான இயக்கமாகவும் உருவெடுத்து நாட்டில் பரவிப் பயன் அளித்து வந்தது. திராவிட இயக்கங்களின் தோற்றங்கள் அவற்றின் குறிக்கோள்கள், கோட்பாடுகள் அவற்றால் திராவிடர்களுக்கு ஏற்பட்ட பலன்கள் ஆகியவற்றை இளைய தலைமுறையினர் தெளிவாகவும், திட்டமாகவும் அறிந்து கொள்ள வேண்டும் என்று திராவிட இயக்க வரலாறு எழுதிய ஆசிரியர்கள் வைக்கும் வேண்டுகோளாகும்.

நீதிக்கட்சி ஓர் அரசியல் அமைப்பாக தொடங்கப்பட்டது அதன் நோக்கம் பிராமணர் அல்லாதாரிடையே விழிப்புணர்வு உருவாக்கித் தேர்தலில் போட்டியிட்டு ஆட்சியைக் கைப்பற்றிச் சமூக நீதியை நிலைநாட்டுவதாகும். நீதிக்கட்சி ஆட்சியில் சென்னை சட்ட மன்றத்தில் 1920 டிசம்பர் 17ஆம் நாள் முதலமைச்சராக சுப்பராயுலு நாயுடு பதவி ஏற்றார். 19211926 இல் பனகல் அரசர் முதல்வர் பொறுப்பு ஏற்றார். 1927 முதல் 1929 வரை டாக்டர். சுப்பராயன் மந்திரி சபை அமைந்தது. அடுத்து 1930 இல தீவான் பகதூர் முனுசாமி நாயுடு தலைமையில் 4 ஆவது மந்திரி சபையும் பின்பு பொப்பிலி இராஜாவும் அமைத்தனர். நீதிக் கட்சி ஆட்சியில் முக்கிய சாதனைகளாகக் கருதப்படுவது பெண்களுக்கு வாக்குரிமை அளித்தது;

சென்னைப் பள்ளிகளில் இலவச காலை உணவு வழங்கும் திட்டம், பஞ்சமர் தீண்டத்தகாதோர், அரிசன் என்ற முத்திரை குத்திய தாழ்த்தப்பட்ட சமுதாயத்தில் இருந்து ஒதுக்கி வைக்கப்பட்ட மக்களை ஆதிதிராவிடர் என்று அழைப்பதற்கான சமுதாய தகுதியை ஏற்படுத்தித் தருவது: உள்ளாட்சி அமைப்புகளில் சீர்திருத்தச்சட்டம் வலுப்படுத்தியது; அமைப்புகளில் சூத்திரர்களுக்கு வாய்ப்பளிப்பது, 1922 டிசம்பர் 18ஆம் நாள் இந்து சமய அறக்கட்டளைச் சட்ட மசோதா நிறைவேற்றம்; சென்னை இராஜஸ்தானியில் உள்ள அனைத்து இந்து கோயில்களும் அரசாங்கத்தின் நேரடிக் கட்டுப்பாட்டில் கொண்டு வரப்பட்டு அரசாங்கத்தின் சமயக் கொள்கை தீர்மானித்தது; தாழ்த்தப்பட்டோருக்கு தனி அதிகாரி நியமிக்கப்பட்டது. வகுப்புவாரி உரிமைச் சட்டம் கொண்டு வந்தது. பெண்களை இழிவுப் படுத்தும் தேவதாசி முறை எனும் தீயப் பழக்கத்தை ஒழித்துக் கட்டிப் புரட்சிகரமான சட்டம் கொண்டு வந்தது என்பன போன்ற சமூக நீதியை நிலை நாட்டி நின்றது நீதி கட்சி ஆட்சி.

கவிஞர்
தமிழ்தாசன்
தி.மு.க தீர்மானக் குழுத் தலைவர்

என்னுடைய கடமை!



எவன் ஆண்டாலும் சரி, இந்நாட்டு மக்களை மனிதனாக மதிக்க வேணும்; அதற்கெல்லாம் பாடுபட வேண்டும்; பாடுபட இடமளிக்க வேண்டும்.

இந்த லட்சியத்தை முன்வைத்து, யார் பாடு பட்டாலும், இதை எங்கெல்லாம் நான் கண்டாலும் அங்கெல்லாம் நான் வலியப் போகிறவன், ஆதரிக்கிறவன். சாதி ஒழிய வேண்டும், அனைவர்க்கும் சுதந்திரம் வேண்டும், காட்டுமிராண்டித் தன்மை மாறி அறிவாளி மக்களாக ஆக்கப்பட வேண்டும் என்ற கொள்கைகளை முன் வைத்து யார் பாடுபட்டாலும், அவர்களை ஆதரிப்பது என்னுடைய கடமை!

- தந்தை பெரியார்

கழகத் தலைவர் – தமிழ்நாடு முதல்வர் தளபதி மு க ஸ்டாலின் அவர்களின் ஆணைக்கிணங்கவும், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர், இளைஞரணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின், அறிவுறுத்தலின்படியும் பேரறிஞர் அண்ணா அவர்களின் 116 ஆவது பிறந்த நாளை கொண்டாடும் விதத்தில் மாநில இளைஞரணி துணைச் செயலாளர் இன்பா ஏ.என்.ரகு, அவரது இல்லத்தில் அமைக்கப்பட்டிருந்த கொடி கம்பத்தில் கழக மூத்த முன்னோடிகளைக் கொண்டு இரு வண்ணக்கொடி ஏற்றி சிறப்பித்தார்.

நீலகிரி மாவட்டத்தில்

388 சுய உதவிக்குழுக்களுக்கு ரூ.37.35 கோடி கடனுதவி!

அமைச்சர் கா.ராமச்சந்திரன் வழங்கி பேச்சு!

நீலகிரி, செப்.18 -

நீலகிரி மாவட்டத்தில், தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் ஊரக வளர்ச்சிமற்றும் ஊராட்சி துறையின் சார்பில்,

சுற்றுலாத்துறை அமைச்சர் .ராமச்சந்திரன் 388 மகளிர் சுய உதவிக்குழுக்களைச் சார்ந்த 766 பயனாளி களுக்கு ரூ.37.35 கோடி மதிப்பில் கடனுதவிகளை வழங்கினார்.

தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி துறையின் சார்பில், மதுரை மாவட்டம், ஒத்தக்கடை வேலம்மாள் காம்பவுண்ட் பகுதியில் நடைபெற்ற அரசு விழாவில், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் கலந்து கொண்டு, தமிழ்நாடு முழுவதும் மகளிர் சுய உதவிக் குழுக்

களுக்கு ரூ.2,735 கோடி மதிப்பில், வங்கிக் கடன் வழங்கும் பணிகளை தொடங்கி வைத்தார்.

தமிழ்நாடு அரசின் உத்தரவின்படி, அனைத்து மாவட்டங்களிலும் மகளிர் சுய உதவிக்குழுக்களுக்கான மாபெரும் வங்கி கடன் உதவிகள் வழங்க வேண்டும் என தெரிவித்ததன் அடிப்படையில், நீலகிரி மாவட்டம், உதகை பழங்குடியினர் பண்பாட்டு மையத்தில் 9.9.2024 அன்று நடைபெற்ற நிகழ்ச்சியில் சுற்றுலாத்துறை கா.ராமச்சந்திரன் கலந்து கொண்டு, 388 மகளிர் சுய உதவிக்குழுக்களைச் சார்ந்த 766 பயனாளிகளுக்கு ரூ.37.35 கோடி மதிப்பில் கடனுதவிகளை வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.லட்சுமி பவ்யா தண்ணீரு முன்னிலை வகித்தார்.

இந்நிகழ்ச்சியில் சுற்றுலாத்துறை அமைச்சர் தெரிவித்ததாவது :

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் ஆட்சியில் செயல்படுத்தப்பட்ட மகளிர் சுய உதவிக்குழுக்களை அடுத்த கட்டத்திற்கு எடுத்துச் செல்லும் வகையில் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஆட்சிபொறுப்பேற்றதும் மகளிர் சுய உதவிக்குழுக்களின் கடன்களை இரத்து செய்தார்கள்.

ஆண்களுக்கு நிகராக மகளிர்களும் முன்னேற வேண்டும் என்ற நோக்கத்தில் பல்வேறு கடனுதவிகள் அரசால் வழங்கப்பட்டு வருகிறது. கடனுதவிகள் பெறும் மகளிர் சுய உதவிக்குழுக்கள் எந்தவொரு தொழில் தொடங்கினாலும், அதனை ஆர்வத்துடனும், முழு ஈடுபாட்டுடனும் மேற்கொண்டு வந்தால், அந்த தொழிலில் நீங்கள் இலாபம் ஈட்டி, வெற்றி பெற முடியும். சுய தொழில் துவங்கும் மகளிர்கள் முறையாகவும், தெளிவாகவும் திட்டமிட்டு செயல்பட வேண்டும். முதலமைச்சர் அவர்கள், நமது மாநிலத்தின் வளர்ச்சியை 2030க்குள் 1 டிரில்லியன் டாலராக உயர்த்த வேண்டும் என்பதற்காக பல்வேறு நாடுகளுக்கு சென்று தொழில் முதலீட்டாளர்களை சந்தித்து, முதலீட்டாளர்கள் மாநாடு நடத்தியதன் மூலம் பல்வேறு புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்தாகியுள்ளது.

தற்போது கூட அமெரிக்கா சென்று பல்வேறு புதிய தொழில் துவங்க புரிந்துணர்வு ஒப்பந்தங்களில் கையெழுத்திடப்பட்டுள்ளது. இதன் மூலம் நமது மாநிலத்தில் தொழில் துவங்கப்பட்டால், அரசுக்கு வரி வருவாய் கிடைக்கும். இந்திய அளவில் தமிழ்நாடு அதிகளவு ஜிஎஸ்டி கட்டுவதில்; மூன்றாவது இடத்தில் உள்ளது.

இந்நிகழ்ச்சியின் வாயிலாக மகளிர் சுய உதவிக்குழுக்களுக்கு வழங்கப்படும் கடனுதவிகளை வைத்து, மகளிர்கள் சொந்தமாக தொழில் துவங்கலாம்.

மேலும், விவசாயம், தேயிலை மற்றும் காபி தோட்டங்களை குத்தகைக்கு எடுத்தல், மண் பாண்டம் தயாரித்தல், நீலகிரி தைலம் தயாரித்தல், தேன் எடுத்தல், தேங்காய் எண்ணெய் தயாரித்தல், தையல் மற்றும் எம்பிராய்ட்ரி தொழில் போன்ற வாழ்வாதார தொழில் மேம்பாட்டிற்காக பயன்படுத்தி, அதன் மூலம் சுய உதவிக்குழு உறுப்பினர்களாகிய நீங்கள் மற்றவர்களுக்கு வேலைவாய்ப்பு வழங்கலாம். இதனை கருத்திற்கொண்டு, தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அனைத்து மாவட்டங்களிலும் மகளிர் சுய உதவிக்குழுக்களுக்கு கடனுதவிகளை வழங்கி அவர்களின் பொருளாதாரத்தை பாதுகாக்க வேண்டும் என்பதற்காக ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறார்கள். அந்த வகையில் நமது மாவட்டத்தில், இன்று நடைபெறும் இந்த நிகழ்ச்சியின் வாயிலாக 388 மகளிர் சுய உதவிக் குழுக்களைச் சேர்ந்த 766 பயனாளிகளுக்கு ரூ.37.35 கோடி வங்கி கடனுதவிகள் வழங்கப்பட்டுள்ளது.

அதேபோல், வாழ்ந்து காட்டுவோம் திட்டத்தின்

கீழ், 2 பயனாளிகளுக்கு இணை மானிய நிதி யின் கீழ், தலா ரூ.4.90 இலட்சம் மதிப்பில் கடனுதவிகளும் வழங்கப்பட்டுள்ளது. தமிழ்நாடு அரசு பெண்களுக்காக பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகிறது. குறிப்பாக, கலைஞர் மகளிர் உரிமைத்திட்டத் தின்கீழ் மாதந்தோறும் ரூ.1,000 உரிமைத்தொகை, விடியல் பயணம், புதுமைபெண் திட்டம், விதவை ஓய்வூதியம், 2 பெண் குழந்தைகள் பாதுகாப்புத்திட்டம், பெண்களுக்கு இலவச தையல் இயந்திரம் வழங்கும் திட்டம், மகளிர் சுய உதவிக்குழுக்களுக்கு கடன் வழங்கும் திட்டம் உள்ளிட்ட பல்வேறு திட்டங்களை நீங்கள் நல்ல முறையில் பயன்படுத்திக் கொண்டு தங்களது பொருளாதாரத்தை உயர்த்திக் கொள்ள வேண்டும் என சுற்றுலாத்துறை அமைச்சர் தெரிவித்தார்.

முன்னதாக, சுற்றுலாத் துறை அமைச்சர், மகளிர் திட்டம், தாட்கோ, மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை, மாவட்ட தொழில் மையம், மாவட்ட முன்னோடி வங்கி, வாழ்ந்து காட்டுவோம் உள்ளிட்ட அரசுத்துறைகளின் சார்பில் அமைக்கப்பட்டிருந்த கண்காட்சி அரங்குகளை பார்வையிட்டார்.

இந்நிகழ்ச்சியில், மகளிர் திட்ட இயக்குநர் காசி

நாதன், மாவட்ட தொழில் மைய பொது மேலாளர் (பொ) திருமதி. திலகவதி, கூட்டுறவு சங்கங்களின் இணைப்பதிவாளர் தயாளன், உதகை நகரமன்றத்தலைவர் திருமதி. வாணீஸ்வரி, உதவி திட்ட அலு வலர்கள் அருண்குமார், திருமதி.ஜெயராணி, சாந்தசீலன், வாழ்ந்து காட்டுவோம் திட்ட அலுவலர் வசந்த், ஊராட்சி ஒன்றியத் தலை வர்கள் மாயன் (எ) மாதன் (உதகை), ராம்குமார் (கோத்தகிரி), 6வது வார்டு உறுப்பினர் திருமதி. வனிதா, மகளிர் சுய உதவிக்குழுக்களைச் சேர்ந்